அதிபர் மா.இராசரெத்தினம் அவர்களின் சேவை நினைவாக...

# சாரல்

இதழ் - 02

தைத்திங்கள் 2011

OBA அரையாண்டுச் செய்திமடல்

பழைய மாணவர் சங்கம்
தி/இ.கி.ச.ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## அதிபரின் வாழ்த்து செய்தி

தி/இ.கி.ச ஶ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளிலே அரையாண்டு செய்தி மடல் ஒன்றினை வெளியிட்டு வருவது பாராட்டுதற்குரிய விடயமாகும். அந்த வகையில் அதன் இரண்டாவது மடல் சாரல் வெளிவருவதையிட்டு மகிழ்வடைவதுடன் அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் இக்கல்லூரிக்கு பக்கபலமாக நின்று அயராது உழைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழும் பழைய மாணவர்கள் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு கல்லூரியின் வளர்ச்சிப்பணியிலே பங்குபெறச் செய்யும் சிறந்த பணியினை இச்சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திலே ஒரு ஒருமைப்பாட்டினை நாம் காணலாம். இச் சங்கத்தின் ஒற்றுமை, புரிந்துணர்வு, உறுதியான செயற்பாடு அயாராத முயற்சி என்பன அச்சங்கத்தினை வளர்ப்பதோடு கல்லூரியின் செயற்பாகளுக்கும் உறுதுணையாகின்றது. சங்க உறுப்பினர்கள், சங்கத்திலே பதவி நிலை வகிப்போர் தங்கள் பதவிக்காலம் முடிவடைந்த வேளையிலும் சங்கத்திலே பற்றுதியோடு நின்று செயற்படுவது பெருமைக்குறிய விடையமாகும் அதனை வேறு எந்த அமைப்பிலும் காண்பது அரிதாகும்.

முன்னாள் அதிபர் திரு.மா.இராஜரெட்ணம் அவாகளின் காலத்தில் பழைய மாணவர் சங்கம் ஒரு துரித வளிர்ச்சியைக் கண்டு செயற்பட்டதுடன் பாடசாலைச் செயற்பாடுகளிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது எனலாம். அந்த வளர்ச்சிப் பாதையில் முன்னாள் அதிபர் அவர்களின் திட்டமிடலும், தலைமைத்துவம் ஒருங்கே சேர்ந்து பழைய மாணவர்களினை ஒரு கூட்டாக செயற்பட வைத்தது. அந்த செயற்பாடு பழைய மாணவர் சங்கத்தினை பலம் பெறச் செய்ததோடு, கல்லூரி வளர்ச்சிக்கும் பக்கபலமாக இருந்தது எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

இச் சந்தாப்பத்திலே இக் கல்லூரியின் அதிபர் என்ற வகையில் பழைய மாணவர் சங்கத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் வரவேற்று பாராட்டும் அதே வேளையில் "சாரல்" செய்தி மடல் தொடர்ந்தும் வெளிவர வாழ்த்தி, சங்கம் "தூரநோக்கு" நோக்கி எந்தவித தடையுமின்றி பயணிக்க எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி
திரு. இ.புவனேந்திரன்
(அதிபர்), தி/இ.கி.ச.ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

### தூரநோக்கு

அவசியமான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டு ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும், இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி.

### நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக் கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும், வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு

### Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities with all necessary resources"

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaining the required resources and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu.
E-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.இ.புவனேந்திரன்
பதிப்பாசிரியர் : திரு.ச.பாரதிநாதன்
உதவி பதிப்பாசிரியர் : திரு.ச.சிறிதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னதமான அதிபர்

கிழக்கிலங்கையின் ஒரு முன்னணிக் கல்விக் கூடமாக திருகோணமலை இராம கிருஷ்ண மிஷன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திகழ்கின்றது. கல்வியிலும், சீலத்திலும் சிறந்து விளங்கும் நல்ல குடி மக்களை உருவாக்குவதில் இக் கல்லூரியின் பங்கு அளப்பரியது. மொழி, சமயம், கலை கலாச்சாரம் என்பவற்றின் வளர்ச்சிக்கான தனது பங்களிப்பை செம்மையாக நிறைவேற்றும் இக்கல்லூரி நவீன கல்வித் தேவைகளை நன்குணர்ந்து மாணவர்களின் அறிவு வளர்ச்சியை நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்கின்றது.

கல்வி நிர்வாகிகளாலும், புலமைசார் விற்பன்னர்களாலும் மிகவும் சிலாகித்து பேசப்படுகின்ற இக்கல்லூரியின் மேன்மைக்கும்,பெருமைக்கும், இக்கல்லூரியில் பணியாற்றிய அதிபர்கள் மூல காரணமாக அமைகின்றார்கள். அத்தகைய சிறந்த அதிபர்களின் வரிசையில் திரு.மா. இராசரத்தினம் அவர்களும் இடம் பெறுகின்றார். 2004ம் ஆண்டிலிருந்து 2011ம் ஆண்டு வரை ஏழு ஆண்டு காலம் இக்கல்லூரியை மிகவும் திறம்பட நிர்வகித்து அர்ப்பணிப்போடு பணியாற்றிய ஒரு உன்னதமான அதிபராக இவரை நான் காண்கின்றேன்.

1990 இலிருந்து 2004 வரை இக்கல்லூரியில் நான் அதிபராக கடமையாற்றிய அந்த நீண்ட காலப் பகுதியில் கல்லூரியின் வளர்ச்சிக்காக என்னோடு தோள் கொடுத்துப் பணியாற்றியதை நான் மறக்க முடியாது. 1993 இல் இவர் அதிபர் சேவை நியமனத்தைப் பெற்றுக் கொண்ட வேளையில் சேவைக்கால ஆலோசகராக கடமையாற்றிக் கொண்டிருந்த இவரை அப்போது திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளராக இருந்த, அமரர் க.தியாகராசா அவர்களின் உதவியுடன் எமது கல்லூரிக்கு பிரதி அதிபராகக் கொண்டு வந்தேன்.

திரு.அ. அருணகுமார் அவர்கள் நிர்வாகத்திற்கு பொறுப்பான ஒரு பிரதி அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த அதே வேளை திரு.மா.இராசரத்தினம் அவர்கள் .பாடவிதான செயற்பாடுகளுக்கும்,மாணவர் நலன்புரி விடயங்களுக்கும் பொறுப்பான பிரதி அதிபராக தனது பணிகளை செவ்வையாக ஆற்றிக் கொண்டிருந்தார். 1993ம் ஆண்டு - இ.கி.ச இந்துக்கல்லூரியும், ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டு தேசிய பாடசாலையாக்கப்பட்ட தருணம் அது. மாணவர் தொகையும் ,ஆசிரியர் தொகையும் திடீரென உயர்ந்திருந்தது. மாவட்டத்தின் முதலாவது தேசிய பாடசாலை பற்றிய சமூகத்தின் உயர்ந்த எதிர்பார்ப்புக்களின் மத்தியில் கல்லூரியின் நிர்வாகக் கட்டமைப்பையும், பாடவிதான செயற்பாடுகளையும் மிகக் கவனமாக கையாள வேண்டிய தருணத்தில் திரு.மா. இராசரத்தினம் அவர்கள் மிகவும் செயற்திறனுடன் இயங்கியதை மறந்து விட முடியாது.

பாடவிதான செயற்பாடுகள் தான் ஒரு பாடசாலையின் முதன்மையான விடயமாகும்.இவர் அதில் மிகவும் தேர்ச்சியும், விருப்பமும் கொண்டவராக இருந்தார்.நேரசூசி ஒழுங்கமைத்தல், வகுப்பறை கற்பித்தல் நடைமுறைகள், ஆசிரியர்களின் பாட ஆயத்தம், கற்பித்தல் வேலைத்திட்டம், பரிகாரக் கற்பித்தல், மேற்பார்வைப் பணிகள், உள்ளகப் பரீட்சைகள் ஆகிய விடயங்களை சீராக நெறிப்படுத்தினார்.

பாடவிதான செயற்பாடுகளுக்காப்பால் மாணவர்களின் ஒழுங்கு, ஒழுக்கக்கட்டுப்பாடு,நலன்ஓம்பும் விடயங்கள்,தலைமைத்துவ விருத்தி முதலிய விடயங்களிலே கரிசனையுடன் செயற்பட்டார். மாணவர் தலைவர்களின் தெரிவு, செயற்பாட்டு ஒழுங்குகள் முதலிய விடயங்களுக்காக சிறந்த முறைமையொன்றை தாபித்தார். மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளிலே மிகுந்த கண்காணிப்புடன் செயற்பட்டார்.

கல்லூரியின் மாணவர் கூட்டுறவுச் சங்கத்தை மிகவும் செயற்றிறனுடன் இயங்க வைத்த பெருமை இவருக்கே உரியதாகும்.கூட்டுறவுத் துறையில் இவருக்கிருந்த அனுபவம் இதற்குக் காரணமாக அமைந்திருந்தது. கல்லூரியின் மாணவர்களும், ஆசிரியர்களும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகசிறந்த பயன்களை பெற்றுக் கொள்ள வழிவகுத்தார். கூட்டுறவுக் கடை,சிற்றுண்டிச் சாலை என்பவற்றின் நிர்வாகத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் சேமிப்பு அலகொன்றையும் உருவாக்கி அச்சேமிப்பின் பலாபலன்களை ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் பெற்றுக் கொடுத்தார். கூட்டுறவுச் சங்கம்அடைந்த இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை மாணவர் கல்வி அபிவிருத்திக்காக செலவழிப்பதற்கும், கல்லூரியின் முக்கியமான சில நிகழ்வுகளுக்கு நிதிப்பங்களிப்புக்களை கூட்டுறவுச்சங்கம் மூலமாக வழங்குவதற்கும் ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இச் சங்கத்தின் சிறந்த செயற்பாடுகள் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் மாகாணத்திலேயே சிறந்த மாணவர் கூட்டுறவுச் சங்கமாக தொடர்ந்து பல வருடங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு திரு.மா.இராசரத்தினம் அவர்களின் நேரிய வழி நடத்தலே காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

1993 இலிருந்து 2004 வரையில் நீண்ட காலமாக பிரதி அதிபராக என்னுடன் தோள் நின்று கல்லூரியின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்போடு பணியாற்றியவர் தான் திரு.மா இராசரத்தினம் அவர்கள். தனது பதவிக்குரிய பொறுப்புக்களை துணிவோடு ஏற்று ,திட்டமிட்ட முறையில் அப் பொறுப்புக்களை நிறைவேற்றி முடிப்பதில் இவர் வல்லவராக இருந்தார். 2004ம் ஆண்டில் நான் கல்லூரியை விட்டு வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக சென்ற வேளையில் மிகுந்த மனத்திருப்தியுடன் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்து சென்றமைக்கு இவரின் இந்த வல்லமையே காரணமாக இருந்தது.

கல்லூரியின் நிர்வாகம் ,பாடவிதானச் செயற்பாடுகள்.மாணவர் ஒழுங்குகள் முதலான சகல விடயத்திலும் முறைமை அணுகுமுறையை இவர் பின்பற்றியதை நான் கண்டிருக்கின்றேன். கட்டளைகள், அதிகாரங்கள் என்பவற்றை விட ஒரு விளைதிறனுள்ள பாடசாலைக்கு முறைமைகள் அவசியமானது. "முறைமைகளே பாடசாலைகளை ஆள வேண்டும்" என்ற கருத்துக்கு ஒப்ப இவர் செயற்பட்டிருப்பதை நான் அவதானித்திருக்கின்றேன். இவ்வாறான பாடசாலைகள் தான் சமூகத்தில் வெற்றிகரமான கல்வி நிறுவனங்களாக மிளிர முடியும். இதனை திரு.மா. இராசரத்தினம் அவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆசிரியர்களுக்கும்,மாணவர்களுக்கும் உரிய வழிகாட்டல்களை வழங்க வேண்டிய பொறுப்பு ஒரு சிறந்த அதிபருக்குரிய பண்பாகும். அது போலவே பெற்றோரையும்,பழைய மாணவர்களையும் கல்லூரியின் வளர்ச்சிக்கான பங்காளிகளாக ஆக்க வேண்டிய பொறுப்பும் அதிபருக்குரியதே. இவற்றை மிக சிறப்பாக நிறைவேற்றினார். பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றை கல்லூரியின் அபிவிருத்தி சார்ந்து பணியாற்றுவதற்கு நேர்த்தியாக வழிப்படுத்தினார்.

குழு உணர்வோடு, உயர்ந்த அடைவுகளை நோக்கி பணியாற்றும் ஆசிரியர் குழாம் இக் கல்லூரியின் ஒரு சொத்தாகும். பாடவிதான செயற்பாடுகளில் மாத்திரமல்லாமல் கல்லூரியின் நிருவாகத்திலும், ஆசிரியர்களுடைய பங்கு பற்றலுக்கு இடமளித்துச் செயற்பட்டார். கல்லூரியின் பௌதிக வளவிருத்தி நடவடிக்கைகளிலும் திட்டமிட்டு காரிய மாற்றினார். புதிய வகுப்பறை கட்டிடங்கள், மைதான விருத்தி, விடுதிக்கான காணி சுவீகரிப்பு போன்ற விடயங்களை இதற்கு உதாரணமாக கூற முடியும்.

நேர்மை, எளிமை, எண்ணங்களில் உறுதி என்பன இவரிடம் காணக் கூடிய தனி மனித குணாம்சங்கள் ஆகும். இக்கல்லூரி ஈட்டிக் கொண்ட பல்வேறு சாதனைகளுக்கும், உயர் அடைவுகளுக்கும் இவரது இந்த குணாம்சங்களும் அடிப்படையாக அமைந்திருக்கலாம் என நான் நம்புகின்றேன். பதினொரு வருடங்கள் பிரதி அதிபராகவும், ஏழு வருடங்கள் அதிபராகவும் இருந்து மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும் வெற்றிகரமான ஒரு கல்வி நிறுவனமாக இக்கல்லூரியை வழி நடாத்திச் சென்ற திரு.மா. இராசரத்தினம் அவர்களது தலைமைத்துவம் உன்னதமானது. ஏனைய அதிபர்களுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இவரது சிறப்பு மிக்க தலைமைத்துவம் காரணமாகவே திருகோணமலை வலயக்கல்வி பணிமனையினால் சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இ.கி.மி.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் வரலாற்றில் திரு.மா.இராசரத்தினம் அதிபர் அவர்களது பெயர் நிலைத்து நிற்கும்.

கல்வி,பண்பாட்டலுவலகங்கள், காணி<br>காணி அபிவிருத்தி போக்கு வரத்து அமைச்சு<br>கிழக்கு மாகாணம்<br>திருகோணமலை

சி.தண்டாயுதபாணி<br>(முன்னாள் அதிபர்)<br>பிரதிச் செயலாளர்.

# வாழ்த்துச்செய்தி



தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது, இக் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளில் மிக்க அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பணியாற்றிவரும் இச் சந்தர்ப்பத்தில் அதன் செய்திமடலான "சாரல்" இதழ் 2 வெளிவருவதையிட்டும் அதற்கான வாழ்த்துச் செய்தி வழங்குதையிட்டும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

கடந்த பழைய மாணவர் தினத்தையொட்டிய நிகழ்வில் யூலை மாதம் வெளியான "சாரல்" இதழ் 1 அனைவரது பாராட்டையும் வரவேற்பையும் பெற்றிருந்தது. இவ் உற்சாகமான நிலையில் உரிய நேரத்தில் இதழ் 2 ஆனது பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளையும் கல்லூரியின் செயற்பாடுகளையும், மாணவர் சாதனைகளையும் வெளிக்கொணர்ந்து அனைவரையும் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளக்கூடிய தகவல்களை தாங்கி வெளிவருவது பாராட்டுக்குரியது.

கடந்த அரையாண்டு காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளில் பழைய மாணவர் சங்கம் அயராது பணியாற்றி வருவதற்கும், இச் செயற்பாடுகளுக்கு சமூகத்தில் கிடைத்துவரும் அங்கீகாரத்திற்கும் இச் செய்திமடல் ஓர் சான்றாக அமைகின்றது.

இச் சங்கத்தின் பணிகள் கல்லூரியின் அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்பை வழங்கிவருவது தொடர்பாக சமூகத்திலிருந்து கிடைக்கப்பெறும் பாராட்டுக்களை மகிழ்வோடும், பெருமையுடனும் கேட்கும் வாய்ப்பு அதிபராகப் பணியாற்றிய காலத்தில் எனக்கு நிறையவே கிடைத்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில் இப் பாராட்டுக்களுக்கு உரித்தான நிர்வாகக்குழுவினரையும் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கும் ஏனைய பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இச் செய்திமடலானது கல்லூரிக்கும் சமூகத்திற்கும் பிணைப்பை ஏற்படுத்தும் ஊடகமாக உரிய காலத்தில் தொடர்ந்து வெளிவர எனது மன நிறைவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு.மா. இராசரெத்தினம்<br>கல்லூரியின் முன்னாள் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



இராமகிருஸ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியானது ஒரு நூற்றாண்டையும் கடந்து கல்விப் பணியை சிறப்பாக ஆற்றிவருகின்றது. இக்கல்லூரியின் கல்வி அசைவியக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பழைய மாணவர்களது பங்காற்றல் குறிப்பிடத்தக்கது.

பழைய மாணவர் சங்கம் கடந்த வருடம் முதல் தமது செயற்பாடுகளையும் கல்லூரி மாணவர்களது புலமைசார் வெளிப்பாடுகளையும் சாரலின் ஊடாக ஆவண வடிவில் வெளியீடாக்கியது. இச் சாரலானது கல்லூரியின் பால் அக்கறை கொண்டவர்களுக்கும் பங்காளிகளுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக தொடர்ந்து வெளியீடு செய்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

இவ்வருடம் பழையமாணவர் சங்கமானது வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர்களின் உதவியுடன் விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கினை நிர்மாணித்தமை ஓர் நினைவுச் சான்று மற்றும் கல்லூரி முதல்வர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களது பணி நலன் பாராட்டு நிகழ்வை பாடசாலை அபிவிருத்திச்சங்கத்துடன் இணைந்து நடத்தியமை மற்றுமோர் சிறப்பம்சமாகும்.

கல்லூரி நிர்வாகத்தில் தலையிடாது கல்விக்கான பல முன்மொழிவுகளை முன் நிறுத்தி செயற்படும் இவ் அமைப்பானது இக்கல்லூரியின் எதிர்கால தேவைகள் திட்டங்கள் என்பனவற்றுக்கு ஆதாரமாகச் செயற்படும் என நம்புகின்றேன்.

இரண்டாவது இதழாக வெளிவரும் சாரல் கனதியானது. ஆயினும் சஞ்சிகை வெளியீடு என்பது சிரமமானது எனினும் இச்சாரல் செய்திகள் உறவாடலுக்கும் விழிப்புணர்வுக்கும் பலமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

பழைய மாணவன் என்ற வகையில் சாரலுக்கு இச் செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன். மேலும் பழைய மாணவர் சங்கத்தினரது முயற்சிக்கும், அர்ப்பணிப்பான சேவைக்கும், நன்றி கூறி அவர்களை உளமாரப் பாராட்டுகின்றேன்.

திரு.செ.பத்மசீலன்
பிரதி அதிபர், (நிதி நிர்வாகம்), தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

---



## பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அடிகளாரின் பாதம்பட்டு ஆசிபெற்ற இக்கல்லூரியின் இடங்களில் எல்லாம் மாணவனாகவும், ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் எனது வாழ்க்கை காலத்தின் பெரும்பகுதியினைக் கல்லூரியில் கழித்துள்ளேன் என்று எண்ணும்போது நான் மிகவும் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எமது பழைய மாணவர் சங்கம் ஆற்றிய பணிகளை பட்டியல் இடமுடியாது. ஏனெனில் அவர்கள் இன்னும் பல சாதனைகளை நிறைவேற்றவுள்ளார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையே. திருக்கோணமலையில் எமது கல்லூரி ஒரு முன்மாதிரியாகவும், ஒரு குறிகாட்டியாகவும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது என்று சொன்னால் அதில் தவறில்லை.

அன்று சுவாமிகள் தொட்டு வணங்கிய விநாயகர் இன்று புதுப்பொலிவுடன் எமது கல்லூரியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றது. எல்லா வழிகளிலும் முன்னேற்றம் கண்டு வளர்ந்துவரும் இக்கல்லூரிக்கு பக்கபலமாய் நின்று உழைத்துவரும் எமது பழைய மாணவர் சங்கத்திற்கு நானும் ஒரு பழைய மாணவன் என்ற ரீதியில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த "சாரல்" சஞ்சிகைக்கு ஒரு செய்தியினை அளிப்பதில் நான் பெருமை அடைவதோடு மேலும் இச்சஞ்சிகை பல நல்ல ஆக்கங்களுடன் வளர்ச்சி பெற வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன். இச்சஞ்சிகையானது வெளிநாடுகளிலும். உள்நாடுகளிலும் வாழும் எமது பழைய மாணவர்களுக்கு ஓர் உறவுப்பாலமாக அமையும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

எனவே எமது பழைய மாணவர் சங்கம் இன்று அல்ல, நாளையல்ல சந்ததி சந்ததியாக மிகவும் துடிப்புடன் உயர்ந்து வளர்ந்து எமது கல்லூரியின் பெருமையைக் கட்டிக்காப்பதில் பெரும் பங்களிப்பை செய்ய வேண்டும் என்று இறுமாப்புடன் தெரிவிப்பதோடு மேலும் இடையறாது தொடர்ச்சியாக அரையாண்டு சஞ்சிகையாக இச் 'சாரல்' காலம் தவறாமல் வெளிவரவேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொண்டு வாழ்த்தி விடைபெறுகினறேன்.

திரு. இ.முருகதாஸ்
பிரதி அதிபர்,
தி/இ.இச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் ஒரு மைற்கல்



இலங்கை அரசால் நடாத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருகோணமலை வலயத்தில் திருகோணமலை மாவட்டத்தில், ஏன் கிழக்கு மாகாணத்திலே ஒரு முன்னிலைப் பாடசாலையாக எமது தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி திகழ்கிறது. அந்த வகையில் எமது கல்லூரியினால் ஈட்டப்பட்ட சாதனைகள் இதோ

| ஆண்டு | தோற்றியோர் | தகைமை பெற்றோர் | தகைமை சதவிதம் | கல்லூரியின் உயர் பெறுபேறு | மாவட்ட உயர் பெறுபேறு | வெட்டுப் புள்ளி | 80 புள்ளிக்கு மேல் பெற்ற வீதம் | 100 புள்ளிக்கு மேல் பெற்ற வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1995 | 89 | 50 | 56.2 | 174 | 174 | 106 | 84.3 | 62.9 |
| 1996 | 109 | 41 | 37.6 | 169 | 175 | 116 | 89.0 | 65.1 |
| 1997 | 98 | 48 | 49.0 | 157 | 157 | 98 | 67.3 | 48.0 |
| 1998 | 123 | 45 | 36.5 | 168 | 181 | 126 | 86.2 | 73.2 |
| 1999 | 125 | 47 | 37.6 | 175 | 175 | 118 | 84.0 | 60.0 |
| 2000 | 134 | 60 | 44.8 | 182 | 182 | 134 | 89.5 | 79.1 |
| 2001 | 116 | 43 | 37.0 | 168 | 170 | 117 | 81.0 | 62.1 |
| 2002 | 131 | 54 | 41.2 | 162 | 177 | 118 | 76.3 | 64.8 |
| 2003 | 138 | 44 | 31.9 | 182 | 182 | 117 | 73.9 | 57.2 |
| 2004 | 144 | 59 | 41.0 | 177 | 177 | 125 | 83.3 | 68.0 |
| 2005 | 149 | 71 | 47.7 | 160 | 160 | 119 | 84.5 | 68.4 |
| 2006 | 155 | 73 | 47.7 | 167 | 173 | 125 | 92.2 | 74.2 |
| 2007 | 143 | 36 | 25.2 | 178 | 178 | 140 | 79.3 | 66.7 |
| 2008 | 140 | 40 | 28.6 | 148 | 159 | 113 | 69.3 | 45.7 |
| 2009 | 138 | 37 | 26.8 | 179 | 188 | 138 | 86.9 | 75.4 |
| 2010 | 148 | 61 | 41.8 | 177 | 180 | 142 | 94.6 | 89.2 |

எமது கடந்தகால தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் 2010ம் ஆண்டு பெறப்பட்ட பெறுபேறுகள் சிகரம் வைத்தாற் போல் அமைந்துள்ளன. திருகோணமலைக் கல்வி வலயத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும் பரீட்சைக்குத் தோற்றியமாணவர்களுள் ஒரே பாடசாலையிலிருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றது எமது கல்லூரி மாணவர்களே என்பதனை பெருமையுடன் கூறமுடியும். கடந்த வருடம் (2010) பரீட்சைக்குத் தோற்றிய 148 மாணவர்களுள் வெட்டுப்புள்ளிக்கு மேல் (142) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 61 ஆகும். இது அண்ணளவாக 41.22 சதவீதமாகும். மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 132 என்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். அத்துடன் கல்வி அமைச்சினால் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்ற அறிவித்தலின் அடிப்படையில் நோக்குவோமாயின் எமது கல்லூரியிலிருந்து தோற்றிய 148 மாணவர்களுள் 147 மாணவர்கள் தகுதி பெற்றது. மற்றுமொரு சாதனையாகும்.

இச்சாதனைகளுக்கு காரணமானவர்கள் தரம் 5இன் வகுப்பாசிரியர்களும், ஆங்கில, சிங்கள ஆசிரியர்களும், தரம் 3-5 இணைப்பாளருமாகும். அந்த வகையில் வகுப்பாசிரியர்களான திருமதி. த. உதயகுமார் (தரம் 5A), திருமதி.தி. கலைச்செல்வன் (தரம் 5AB), திருமதி.தே ஆனந்தன் (தரம் 5B), திருமதி வ. கணேசலிங்கம் (தரம் 5D), ஆகியோர்க்கும், ஆங்கில ஆசிரியர்களான திரு. ஸ்ரீரங்கநாதன்,திருமதி ந. யோகேஸ்வரன் ஆகியோருக்கும், சிங்கள ஆசிரியையான திருமதி.ஜெனிற்றா சுரோமி அவர்களுக்கும் ஆரம்பப்பிரிவு உப அதிபர் என்றவகையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இச்சாதனைகளைப் பெறுவதற்கு இணைப்பாளராக இருந்து செயற்பட்ட செல்வி விஜயலட்சுமி சிவபுண்ணியம் அவர்களுக்கும், முதன்மைநிலை ஒன்றிலும் இரண்டிலும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்

இவ்வாறன வெற்றிகளைப் பெறுவதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய எமது முன்னாள் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

திருந.சங்கரதாஸ்
உப அதிபர், (ஆரம்பப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயத்தையும் நேசியுங்கள்

எமது இதயம் இறைவனின் ஒரு வரப்பிரசாதம். அது எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக உள்ளதோ அவ்வளவுக்கு நாமும் ஆரோக்கியமாக வாழலாம். இதயத்தைப் பொறுத்தவரை மாரடைப்பு நோயே மிகமுக்கியமான உயிர்கொல்லி நோயாக உள்ளது. இது கூட நமது இன்றைய வாழ்க்கைமுறை, அலட்சிய நடத்தை, போதிய அறிவின்மை என்பவற்றால் வளர்ந்துவரும் நாடுகளில் (இலங்கை உட்பட) மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதயத்தை பாதிக்கும் காரணிகள் இருவகை.

1. மாற்றமுடியாதது
   1 பால் (ஆண் > பெண்)
   2 பரம்பரையாக உள்ளது (HDL - கொலஸ்ரோல்)

2. மாற்றக்கூடியது
   1 புகைத்தல்/மது அருந்தல்
   2 அதிகூடிய உடல் எடை, பருமன்
   3 மன உளைச்சல்/அழுத்தம்
   4 உயர் குருதியமுத்தம் (Pressure) சலரோகம் போன்ற வருத்தங்கள்
   5 போதிய உடற்பயிற்சியின்மை /சொகுசாகன வேலை/வாழ்க்கை முறை
   6 கொலஸ்ரோல் (cholostrol)

ஆக மாற்றக்கூடிய பல காரணிகளை நாம் அறிந்து அவற்றை சீர்ப்படுத்துவதனால் மாரடைப்பை தவிர்க்கலாம். மேலும் மாரடைப்பு என்பது இதயத்துக்கான இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பினால் இதய சதைகள் செயற்பாடு அற்றுபோவதால் ஏற்படுகிறது. இதன் அறிகுறிகளாவன.

1 நெஞ்சுவலி (இடது, வலது) - (இது சலரோக நோயாளிகளுக்கு குறைவாக காணப்படும். அத்துடன் அல்சர், நெஞ்செறிவு நோய் என்று ஏமாறவும் வாய்ப்புண்டு)
2 மூச்சுவிட கஷ்டம்
3 இடதுகை, கழுத்து, தாடையில் விறைப்புத்தன்மை
4 வாந்தி, மலம் போகவேண்டும் என்ற உணர்வு
5 வியர்வை
6 பொதுவாக ஓய்விலோ, பாரதூரமான வேலையின்பின் அல்லது அதிக உணவின் பின்னர் ஏற்படலாம்.

இவ்வறிகுறிகள் ஒன்றோ,பலவோ இருப்பின் உடனடியாக அஸ்பிரின் (Aspirin) வில்லை ஒன்றை (300ml) கரைத்து குடித்துவிட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு விரைந்து செல்ல வேண்டும். (போகும்போது படுத்தபடி செல்லுதல் நன்று)

அதன்பின் போதிய சிகிச்சையை கொடுப்பதால் உயிர்தப்பும் வீதம் அதிகப்படும். அதேவேளை பிந்தும் ஒவ்வொரு நிமிடமும், இதயத்தை மீளா அதிர்வு நிலை (Cardiac Shock) ற்கு எடுத்துச் சென்றுவிடும். ஆக சீரான உடற்பயிற்சி, உணவு, தியானம், யோகா, போன்றவற்றுடன் வேறு நோயுள்ளவர்கள் அதற்கான சிறந்த மருத்துவ முறையை மேற்கொள்வதோடு குறைந்தது 6 மாதத்துக்கொரு தடவை கொலஸ்ரோல் (Cholstrol) பரிசோதனை செய்யவேண்டும்.

Total Cholostrol <200mg
LDL Cholostrol 70-100mg
HDL Cholostrol >40mg
Triglyorids <150mg

எனும் அளவில் பேணல் நன்று. அத்துடன் 40வயதிற்கு மேற்பட்டோார் கட்டாயம் உடற்பரிசோதனை செய்ய வேண்டும்.

அத்துடன் வீட்டில் கண்டிப்பாக Asprin வில்லைகளை வைத்திருக்கவேண்டும். மாரடைப்பு வந்தவர் மேலதிக சிகிச்சையான Angiogram, Bypass Surgery என்பவற்றை செய்து ஓரளவு இதயத்தை சுகமாக வைக்கமுடியும். ஆனால் இது எல்லோராலும் முடியாது. செலவு கூடியது. எனவே எம்மால் முடிந்தளவு நமது இதயத்தை சுகமாகவும், ஆரோக்கியமாகவும் வைப்பது எமது கடமை. அடுத்தவரது இதயத்தை நோகடிக்காது வாழ்வது எவ்வளவு அவசியமோ அதைவிட நமது இதயத்தையும் நேசிக்கவேண்டும்

**Laughing is Good for Health - Old, Moving is Good for Health - New**

நன்றி

Dr.ச.கோகுலன்,
பழைய மாணவர்சங்க உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரியின் விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கும் இலண்டன் பழைய மாணவர்களினது அன்பளிப்பும்

இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் விளையாட்டு மைதானம் இன்று சில அடிப்படைத் தேவைகள் முடிவுற்ற நிலையில் மாணவர்களினால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. எனினும் இக்கல்லூரி மைதானத்திற்குரிய அவசியத் தேவைப்பாடுகள் பல இன்னமும் பூர்த்திசெய்யப்படாமல் காணப்படுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. இக்கல்லூரியின் விளையாட்டு மைதானம் அரச வர்த்தகமானி அறிவித்தல் மூலம் அதிகாரபூர்வமாக கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இவ்விதம் கையளிக்கப்பட்டிருந்த மைதானத்தினை செப்பனிட்டு, எல்லைகள் இட்டு வரையறைப்படுத்தி அதனை ஒரு முழுமையான பாவனைக்குள் கொணர்வதில் பலதரப்பட்ட இடர்பாடுகள் காணப்பட்டது என்பது ஒரு கசப்பான உண்மையாகும். (Bitter Truth)

இவ்வாறு எம் கல்லூரி நிர்வாகத்திற்கு ஏற்பட்ட இடர்பாடுகளையெல்லாம் அக்காலப்பகுதியில் அதிபராக இருந்த திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் கல்லூரி நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் போன்ற கல்லூரியின் அமைப்புகளுடன் இணைந்து ஸ்திரமாகவும், நிதானத்துடனும் செயல்பட்டு வெற்றிகொண்டதன் விளைவால் இன்று இம்மைதானம் ஒரு கணிசமான அளவு வளர்ச்சிப் போக்கினைக்கண்டு எமது கல்லூரிக்கு மட்டுமல்லாது ஏனைய சகோதரப் பாடசாலைகளுக்கும் பெரும் உதவியாக நின்று செயல்பட்டு வருகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

விளையாட்டு மைதானத்தின் தேவைகள் கருதி பழைய மாணவர் சங்கத்தின் முழு முயற்சியின் மூலம் சில தன்னார்வமுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் அனுசரணையுடன் கூடைப்பந்தாட்டம், கிணறும் நீர்தாங்கியும், மற்றும் நீர் விநியோக வசதிகளும் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்க பட்டிருந்தது. இத்துடன் சிலிங்கோ லைப் நிறுவனத்தினால் ஸ்கோர் போட் ஒன்றும் ஸ்தாபித்து கொடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பல தேவைப்பாடுகள் பழைய மாணவர் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் மிகவும் அத்தியாவசியமான தேவையாக காணப்பட்ட பார்வையாளர் அரங்கு பழைய மாணவர் சங்கத்திற்கு ஒரு சவாலாக அமைந்திருந்தது. எனினும் முன்னாள் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களின் விடாப்பிடியான முயற்சியின் மூலம் இலண்டன் வாழ் பழைய மாணவர்களினதும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினதும் நிதிப்பங்களிப்புடனும், சங்கத்தின் மனிதவள பங்களிப்புடனும் இப்பார்வையாளர் அரங்கு மிககுறுகிய ஆறுமாத காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிர்மாணப்பணிக்கு இலண்டன் வாழ் பழைய மாணவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அவர்களிடம் இருந்து இரண்டு கட்டமாக ரூபா 823,894.00 நிதி தொகையினை மிகவிரைவாக பெற்று எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க கணக்கிற்கு உரிய நேரத்தில் அனுப்பிவைத்து, அந்த மகத்தான பணியினை நிறைவேற்றி தந்த திரு.சி.இரட்ணதீபன், திரு.கு.பத்மநாதன் மற்றும் திரு.கஜேந்திரன் அவர்களுக்கு இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் என்றென்றும் நன்றியுணர்வோடு இருக்கும் என்று தெரிவித்துக் கொள்வதோடு அந்த வரலாற்று உதவியினை ஞாபகத்தில் நிலை நிறுத்தி வைத்துக் கொள்ளும் என்பதனையும் இங்கு சுட்டிக் காட்டுவதில் சங்கம் பெருமையடைகின்றது.

இதேபோல் எம் உள்ளூரில் வாழும் பழைய மாணவர்களினது நிதியுதவியினையும் கட்டிட பொருட்கள் உதவினையும் பெற்று மிகுதித் தொகை வேலையினை மிகவும் கச்சிதமாக செய்து முடித்ததில் பழைய மாணவர்களினதும், நிர்வாககுழு உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புகளும், உதவிகளும் பாரிய அளவில் கிடைக்கப் பெற்றிருந்தமையினையும் இங்கு சுட்டிக் காட்டல் சாலப்பொருத்த மாகும். உள்ளூர் பழைய மாணவர்களிடம் உதவிகளைக் கேட்ட போது அவற்றை மனம் உணர்ந்து நல்கியமை இக்கட்டிட நிர்மாணப் பணிக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.




அண்ணளவாக 1.8 மில்லியன் ரூபா தொகையில் கட்டி முடிக்கப்பட்ட இப்பார்வையாளர் அரங்கு செயல்திட்டமானது எமது சங்கத்தின் வரலாற்றில் ஒரு பெரிய செயல்திட்டமாக அமைந்திருந்ததோடு மட்டுமல்லாமல் சங்கத்தின் செயல்பாட்டில் இது ஒரு மைல் கல்லாகவும் அமைந்திருந்தது. உள்ளூரிலும், வெளியூரிலும் வாழும் பழைய மாணவர்களின் பங்களிப்புப் பணி தொடரும் வரையில் கல்லூரி தன் வளர்ச்சிப் பாதையில் தடையின்றி நடைபோடும் என்று ஐயம் தெளிவுறக் கூறிக்கொண்டு விடை பெறுகின்றேன்

திரு.இ.கைலவாசன்
(உபசெயலாளர்)
பழைய மாணவர்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

**நல்லது செய்வோம் வாரீர்...**

"ஆனா" எனும் எழுத்தை அரிவரியில் படிப்பித்த ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தையும் தொடர்ந்து எமக்குக் கல்வி அறிவூட்டி எம்மை வளர்த்தெடுத்த திருகோணமலை இந்துக் கல்லூரியையும் நாம் இப் பூமிப்பந்தில் எவ்விடத்தில் எந்த நிலையிலிருந்தாலும் இலகுவில் மறந்திடத்தான் முடியுமா? பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் போல நாம் கற்ற கல்லூரியும் எம் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்ததல்லவா?



இவ்வாறு எண்ணங் கொண்ட புலம் பெயர்ந்து தற்போது கனடாவில் வாழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலர் ஒன்று கூடி ஆரம்பித்ததுதான் "திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா". கனடா நாட்டின் டொரொன்ரொ மாநகரில் 2002ம் ஆண்டு ஆவணித் திங்கள் 24ம் நாள் இச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



வாழ்வும், வசதிகளும் வரும் போது நாம் பழையவற்றை மறந்துவிடக் கூடாது. தற்போது பழைய மாணவர்களாகிய நீங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் எவ்வாறு பங்காற்றுகிறீர்களோ அதே போல் புலம்பெயர்ந்து செல்லும் நாட்டிலிருந்தும் முடிந்தளவு பங்காற்ற வேண்டும். 1999ம் ஆண்டு நான் கனடாவிற்குப் புலம் பெயர்ந்து வரும்போது என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்த அப்போதைய கல்லூரி அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் இக் கோரிக்கையை அவரது செய்தியாகவே சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் எனது ஆரம்ப உரையில் எடுத்துரைத்தேன்.

கனடா நாட்டில் ஓரளவு வசதியாக வாழும் நாம் தாயகத்தில் எமது கல்லூரியில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்கட்கு குறிப்பாக உயர் கல்வி கற்பதற்கு பொருளாதாரமே ஒரேயொரு தடையாக இருப்போருக்கு எம்மாலான உதவிகளைச் செய்வோம். இதற்கென கல்லூரியின் புகழ் பெற்ற பழைய மாணவரும், சமூக சேவையாளருமான அமரர். டாக்டர்.ச.ஞானசேகரன் அவர்களின் பெயரில் "டாக்டர் ஞானி கல்வி நிதியம்" என்ற ஒன்றை இன்றே ஆரம்பிப்போம் என்ற எனது கோரிக்கையை அன்றைய பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் பெரு வரவேற்புடன் ஏற்றுக் கொண்டனர். இதன்படி எமது செயற்குழு, கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் முறைப்படி மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கோரி வகுப்பாசிரியர்களாலும், அதிபராலும் விதந்துரைக்கப்பட்ட பதினைந்து மாணவர்கட்கு முதற்கட்டமாக உதவிகள் வழங்கப்பட்டன. இரண்டரை ஆண்டுகளாக இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில் சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட திருமலை மக்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் எம்மாலான சிறு உதவிகள் கல்லூரி அதிபரூடாக வழங்கப்பட்டது.

பின்பு தலைவராகப் பொறுப்பேற்ற திரு.சி.தம்பிராஜா அவர்களின் ஆலோசனைப்படி பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பை இழந்த வசதி குறைந்த திறமையான மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் உயர் கல்வி கற்க தனிப்பட்டோரின் பெயர்களில் புலமைப் பரிசில்கள் வழங்கும் திட்டம் தீட்டப்பட்டது. அமரர்களான தம் அன்புக்குரியோரின் பெயர்களில் இப்புலமைப் பரிசில்களை வழங்க ஐந்து குடும்பத்தினர் எமக்கு ஒப்புதல் வழங்கி இருந்தனர். மேற்படி திட்ட வரைபுகளுடன் தாயகம் வந்த திரு.சி.தம்பிராஜா அவர்கள் அதிபர் திரு.மா.இ.ராஜரெட்ணம், மற்றும் சில பழைய மாணவர்களுடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால் அக்கால கட்டத்தில் தொடர்ச்சியாக நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையும், அதனால் புலம் பெயர்ந்து இங்கு வாழும் மக்களின் மனநிலையில் ஏற்பட்ட ஒரு தடுமாற்றமும் இவ்விரு திட்டங்களையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களை ஏற்படுத்தின.



மூன்றாண்டுகள் எமது சங்கம் ஒரு உறங்கு நிலையிலேயே இருந்தது என்பது ஒரு துயரமான உண்மையாகும். அதே வேளை தற்போது மீண்டும் இச்சங்கம் புத்துணர்ச்சியுடன் செயற்படத் தொடங்கியுள்ளது என்பது ஒரு மனநிறைவான மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தற்போதைய செயற்குழு முதற்கட்டமாக டாக்டர் ஞானி கல்வி நிதியத்தை புனரமைத்து வசதி குறைந்த மாணவரின் உயர் கல்விக்கு உதவுவது எனவும், தொடர்ந்து புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதெனவும் இவற்றைத் தாயகத்திலுள்ள பழைய மாணவர் சங்கத்தினூடாக செயற்படுத்துவதெனவும் தீர்மானித்து துரிதமாக செயலாற்றி வருகின்றது என்ற நற்செய்தியை தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

திரு. கே.கே.தயாநிதி
(தலைவர்)
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா
**10.01.2011**

மின்னஞ்சல் வசதியுடன் இருக்கும் பழைய மாணவர்கள் oba@trincohindu.sch.lk என்ற பழைய மாணவர் சங்க மின்னஞ்சலுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு வேண்டப்படுகிறீர்கள். தங்கள் முதல் மின்னஞ்சலில் உறுப்புரிமை இருப்பின் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய மாணவர் சங்க செயலாளரின் அறிக்கையும் எதிர்கால செயற்பாட்டு திட்டங்களும்.

எங்கள் சங்கத்தினதும் கல்லூரியினதும் பெயரோடு மட்டுமன்றி சகல செயற்பாடுகளிலும் எம்மோடு இணைந்து நிற்கும் கோணேஸ்வரப் பெருமானைஒரு கணம் கைதொழுது, எமது சஞ்சிகையான 'சாரலின்' மூலம் கல்லூரிச் சமூகத்தினராகிய உங்களோடு சில விடங்களை பரிமாறிக் கொள்ளவிளைகின்றேன். காலத்தின் ஓட்டம் எமக்கு தந்தது நல்ல படிப்பிணைகளையும், சகல விடயங்களிலும் கல்லூரியோடு தோளோடு தோள் கொடுக்கும் முற்போக்கான சிந்தனையுள்ளத்தையும் ஓர் கல்லூரிச் சமூகத்தினையும் என்றால் அது மிகையாகாது. உள்நாட்டில் மட்டுமன்றி புலம் பெயர் நாடுகளிலும் வாழும் பழைய மாணவர்களும் கல்லூரி நலன் விரும்பிகளும் எமக்கு இடைவிடாது ஆற்றிக்கொண்டிருக்கும் சேவைகளையும் உதவிகளையும் நாம் என்றென்றும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். இவர்கள் எல்லோரும் இல்லையென்றால் எமது சங்கத்தின் இயக்கம் இல்லையென்றுகூடச் சொல்லமுடியும். இப்பேர்ப்பட்ட சிறந்த பண்பாளர்களைக் கொண்டு தோற்றம் பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் எங்களுடைய சங்கமானது தனது சேவைகளை கல்லூரியின் தேவைகருதி விஸ்தரிக்கவேண்டும் என்றால்! உங்களுடைய கல்லூரி இலங்கையில் சகலதுறைகளிலும் தரமிக்க கல்லூரியாக மிளர வேண்டும் என்றால்! சகல பழையமாணவர்களும் எம் சங்கத்தில் தாமாகவே வந்து அங்கத்துவத்தினைப் பெற்று அவ்வழியே சங்கத்தையும் கல்லூரியையும் பலப்படுத்தி வளப்படுத்த வேண்டும் என்று உங்கள் கல்வித்தாயின் சார்பாகக் கேட்டுக்'கொள்கின்றேன்.

எம் கல்லூரியின் கல்வித்தரத்தினை மேலும் மேலும் மெருகேற்றிக் கொண்டிருக்கும் என் மதிப்பிற்குரிய ஆசிரிய ஆசிரியைகளிற்கு மரியாதையை செலுத்திக் கொண்டு, எம் கல்லூரியின் பால் எமது பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படவிருக்கும் எதிர்காலச் செயற்பாட்டுத்திட்டங்களை முன்வைப்பது சாலப் பொருத்தமாகும் என நினைக்கிறேன்.

**எதிர்காலச் செயற்பாட்டுத்திட்டங்கள் :**

01) நவீன கற்கைமுறைகளை உள்வாங்கி சகல வசதிகளும் கிடைக்கப் பெற்ற ஆரம்ப பிரிவு வளாகம் (Child Recreation Centre, Children Play field, Mini Computer Lab, Instramental room. Mini Experimental Lab, English Self Leaming Unit etc.....) எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் முற்போக்காக சிந்தித்து இடப்படும் அத்திவாரமே, நிலையான தண்மையுள்ள ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கும் என்று பழைய மாணவர் சங்கம் கருதுகின்றது. ஆரம்பபிரிவு வளாகத்திற்குரிய பெற்றோர்களின் ஒன்று திரட்டலுடன் பழைய மாணவர்சங்கமும் கைகோர்க்குமாயின் இது எளிதாக எட்டப்படக்கூடிய விடயம்.

02) திருகோணமலை கல்வி வலயத்தில் கல்விகற்கும் மாணவ மாணவிகளின் கல்வித்திறனை மெருகூட்டும் நோக்கிலும் தெளிவற்ற விடயங்களை தெளிவுபெறச் செய்யும் நோக்கிலும் ஒவ்வொரு மாணவனும் தனது நிலையை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், அவர்களின் பகுத்தாய்வுத்திறனை விருத்தி செய்யும் நோக்கிலும், மாணவ மாணவிகளிடம் காணப்படும் தனித்தன்மையான திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் வளர்ப்பதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாக விஞ்ஞான வினாவிடை போட்டிகள், சிறுகதைப் போட்டிகள், கவிதையாக்கப் போட்டிகள், ஆய்வுக் கட்டுரைப் போட்டிகள், விவாத அரங்குகள், பட்டிமன்றங்கள், நாட்டிய நாடகங்கள், சங்கீத இசை விழாக்கள், ஓவியக்கண்காட்சிகள், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கு ஒரு களத்தை அமைத்து தகுந்த அனுசரனையாளர்களை அடையாளம் கண்டு தொடர்புபடுத்தும் ஊடக நிறுவனமாக கல்வித்திணைக்களத்திற்கு எமது பழைய மாணவர்சங்கம் விளங்கமுடியும் என்று கருதுகிறேன். ஒரே விடங்களை செய்யும் நிறுவனங்கள் வேறுபட்ட விடயங்களை எடுத்துச் செய்வதற்கு ஆவன செய்யலாம்.

03) எமது கல்லூரியின் மின்னிணைய தரவுத்தளத்தை கையிருப்பில் உள்ள தரவுகளை உள்வாங்கி மெருகூட்டுவதன் பொருட்டு உள்ளூரில் வாழும் திறமையும் ஆளமையும் கொண்ட தன்னார்வமுள்ள பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும கல்லூரி மாணவர்களையும் கொண்ட குழுவொன்று அமையப்பெற்று, அவர்களின் தொடர்ச்சியான இயக்கத்தின் மூலம் செயற்படுத்துவதற்கு தேவையான உதவிகளைச் செய்தல்.

04) தொழிலின் நிமிர்த்தம் உயர் கல்வியின் பாலும் இடம் பெயர்ந்து தலை நகரில் வாழும் பழைய மாணவர்களின் செற்பாட்டுக்கும், சமூக ஒன்று கூடலுக்கும், ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கும் முகமாகவும் மீண்டும் கல்லூரியுடன் ஓர் இணைப்புப் பாலத்தை ஏற்படுத்தும் நோக்குடன் " பழைய மாணவர் சங்க கொழும்ப கிளையை" அமைத்தல்.

05) நவீன தொழில் நுட்பத்துக்கு முகம் கொடுத்து எம் கல்லூரி மாணவர்களை முன்னேற்றம் காணும் நோக்குடன் எங்களுடடைய கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடங்களும், கணினி ஆய்வு கூடங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் .புதிய பல உணர்திறன் கூடிய விலை மதிப்புள்ள உபகரணங்கள் பொருத்தப்படக் கூடிய வகையில் ஆய்வு கூடமானது குளிரூட்டப்படல் வேண்டும்.
காலத்தின் மாற்றத்தோடு மாணவர்களையும் மாற்றத்திற்குள்ளாக்க வேண்டிய கடப்பாடு ஒன்று கல்வி சமூகத்தினராகிய எமக்குண்டு இதற்கு தேவையான அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கு ஆர்வம் காட்டும் அனுசரணையாளர்களையும்,நல்ல நிலையில் உள்ள பழைய மாணவர்களையும் அடையாலம் கண்டு பழைய மாணவர் சங்கமானது செயற்படுகின்ற அதே வேளையில் பராமரிப்புச் செலவுகளை சமாளிப்பதற்கான திட்டம் ஒன்றும் உருவாக்கப்படல் வேண்டும்.

06) பழைய மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகளையும்,செயற்பாடுகளையும்,செயற்திட்டங்களையும்,கல்லூரியன் தேவைப்பா டுகளையும்,கல்லூயின் நிகழ்வுகளையும் உடனுக்குடன் பழைய மாணவர்களும் ,கல்லூரி நலன் விரும்பிகளும் அறியும் வண்ணம், செலவுகளற்ற முறையில் தன்னார்வமுள்ள பழைய மாணவர்களடங்கிய குழுவின் மூலம் பழைய மாணவர் சங்கத்தின் ஆளுகைக்குற்பட்டு ஓர் தனியான மின்னணியைத் தரவுத் தளமானது வடிவமைக்கப்பட்டு இயக்கம் பெற வேண்டும். இத்தரவுத்தளமானத கல்லூரியின் இணையத்தளத்துடன் தொடர்புபடுத்தப்படல் வேண்டும்.

07) நகர மத்தியில் அனைவரின் பாவனைக்கும் எற்ற வகையில் அமைதியான தெய்வீகச் சூழல் அழகுடன் அமையப் பெற்ற எங்கள் கல்லூரியின் சம்மந்தர் ஒன்று கூடல் மண்டபமானது அழகு பெறச் செய்யப்பட்டு அழகான ஆசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கைகளால் அலங்கரிக்கப் படல் வேண்டும். பறவைகள் எச்சங்கள் இடா வண்ணம் பலகாணிகள், மாடமானது சுற்றி வர அலுமினிய வலைப்பின்னல் வேலையினால் அடைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

08) கணினியின் அதி உச்ச பயன்பாடும் ,தேவையும் உள்ள வகுப்பைச் சேர்ந்தவசதியுள்ள மாணவர்கள் தங்களது கூட்டு முயற்சியின் மூலம் வகுப்பறைக்கான கணினியை பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டால் அதற்காக தேவைப்படும் ஒரு சிறிய மேலதிக தொகையை பழைய மாணவர் சங்கமானது பொறுப்பேற்கும். பாவனையாளர்களின் பங்கு சரிவர அமையப் பெற்றால் தான் பெற்ற பொருள் வீண் போகாது. பாவனைக் குற்படுத்தப்படும் என பழைய மாணவர் சங்கம் கருதுகிறது. முயற்சியுள்ளவர்களுக்கு பழைய மாணவர் சங்கம் என்றும் துணை நிற்கும்.

09) எமது கல்லூரியின் திறந்த வெளி முற்றமானது சீமெந்துகற்கல் கொண்டு பதிக்கப்பட்டு, பொருத்தமான முறையில் மழை நீரை வெளியகற்றுவதற்கான வடிகாலும் அமைக்கப்பட்டு அழகு படுத்தப்படல் வேண்டும்.

10) பார்வையாளர் அரங்கம் ஒன்று அமையப் பெற்ற எங்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானமானது மாணவர்களின் அதி உச்ச பாவனைக்கு ஏற்ற வகையில் Tennis Conrt, Swimminy Pool, parents pavilion, மெய்வல்லுநர் போட்டிகளிற்கான நிரந்தரமான Inner track, Volley Ball Cour, Gymnasium, Bicycle Park, Dress Changing Room, மற்றும் மலசல கூடம் என்பவற்றுடன் உறுதிப்படுத்தப்பட்ட சுற்று வேலியும் கொண்டு அபிவிருதத்தி செய்யப்படல் வேண்டும். திறமையுள்ள, தன்னார்வமுள்ள பழைய மாணவர்களைக் கொண்டு Athlteic Coahing camps, Foot ball coaching camps, cricket coaching camps போன்றவை அடங்கலான நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு எங்களது மாணவர்களை வளம் பெறச் செய்வதற்கான நடவடிக்கைகளில் பழைய மாணவர் சங்கமானது விளையாட்டுத்துறை சார்பினரோடு கைகோர்க்க என்றும் தயார். விளையாட்டு மைதானத்துக்கென ஒரு பராமரிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு பராமரிப்பு வேலைகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படல் வேண்டும். பிரதான வீதியை ஒட்டிய வேலி ஓரங்களில் வருட வாடகைக்கு Signing Boards இடுவதற்கு சில நிறுவனங்களுக்கு இடம் கொடுப்பதன் மூலம், மைதான பாவனை வாடகைப் பணம் அறவிடுவதன் மூலம் பராமரிப்பு வேலைகளை கொண்டு செல்லலாம்.

11) ஆரம்ப பிரிவு வளாகத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கான விடுதி ஒன்றும் வெளியூர் மாணவர்கள் தங்குவதற்கான விடுதியொன்றும், பொருத்தமானவிடத்தில் சரஸ்வதி சிலை ஒன்றும், பெற்றோருக்கான தரிப்பிடமும் அமைக்கப்பட வேண்டும்.

12) இராமகிஷ்ண சங்கத்தின் சுவாமி விபுலானந்தா அடிகளாரின் தலைமைத்தவத்தின் கீழும்,அவர்களின் வழிகாட்டலுடனும் நிர்வாகிக்கப்பட்டு வந்த எமது கல்லூரியானது இராமகிஷ்ண சங்கத்திற்கான ஒரு அமைப்பினை கல்லூரி மட்டத்தில் நிறுவி அவ்வமைப்பின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கு வசதியாக மண்டபத்துடன் கூடிய விடுதி ஒன்றினை அமைத்து ஆன்மீகப் பணியினை தொடர்ச்சியாக நடாத்தி செல்ல வேண்டும் என்ற எண்ணம் பழைய மாணவர் சங்கத்திடம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கொழும்பு இராமகிஷ்ண சங்கத்தின் தலைவர் சுவாமி சர்வரூபாணந்த ஜி அவர்கள் திருகோணமலைக்கு ஆண்மீகப்பணியின் நிமித்தமோ, அல்லது பொதுப்பணியின் நிமித்தமோ வருகை தரும் வேளையில் சுவாமி அவர்கள் இவ் விடுதியில் தங்குவதற்கான உரிமையினை அவர்களுக்கு அளிக்க வேண்டும். அவ்வுரிமையினை சுவாமி அவர்கள் ஏற்றுக் கல்லூரியின் பால் சுவாமி அவர்களின் ஆன்மீகப் பணி என்றென்றும் தொடர வேண்டும் என்று எமது பழைய மாணவர் சங்கம் மிகவும் அன்புடனும், பணிவுடனும் கேட்டுக் கொள்கிறது. இவ்விடுதி அமைப்பின் நிர்மாணப் பணியினை ஏற்றுக் கொள்வதற்கு பழைய மாணவர் சங்கம் என்றும் தயாராக உள்ளது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

13) விளையாட்டு மைதானத்துக்கும், ஆரம்பப் பிரிவு வளாகத்துக்குமென தனித்தனியாக படலை, பெயர்ப்பலகைகள் கொங்கிறீற் தூண்களுடன் அமைக்கப்பட வேண்டும்.

14) பிரதான கல்லூரி வளாகத்திற்கும், கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கும் மாணவர்கள் இடையூறின்றி சென்று வருவதற்கு இரும்பினாலான மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

15) பொதுவான ஒன்ற கூடலிற்குபாவிப்பதற்காகவும், பார்வையாளர் அரங்கின் பாவனைக்காகவும் 200 பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளது.

16) இந்துக் கல்லூரி வளாகத்தில் இருந்து கோணேஸ்வரா வளாகத்திற்கு மழை காலங்களில் இடையூறின்றி சென்று வருவதற்கு ஓர் இணைப்புக் கூடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

பழைய மாணவர் சங்கமானது இத்தனை வருட காலமும் வினைத்திறனோடும் இனங்காணப்பட்ட தேவையான செயற்பாடுகளின் அமுலாக்கத்துடனும் வீறு நடை போட்டுக் கொண்டு வந்தாலும் கூட நீண்ட நாட்களாக காணப்படும் ஒரு சீறற்ற விடயமாக முறையான பயனுறுதி வாய்ந்த திட்டமிடல் இன்மை ஒன்று காணப்படுகின்றது. என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே முறையான திட்டமிடல் ஒன்றின் அவசியம் தற்போது தலைதூக்கி நிற்கிறது என்பது நிதர்சனம். மேற்கூறப்பட்ட செயற்பாடுகளிற்கு ஒரு பயனுறுதி வாய்ந்த வினைதிறன் மிக்க ஒரு திட்டமிடல் முறைமை ஒன்றின் தேவைப்பாட்டினை பழைய மாணவர் சங்கம் உணர்ந்து செயற்பட வேண்டிய காலத்தின் தேவையொன்று தற்போது எழுந்துள்ளது. உதாரணமாக கல்லூரியின் வழமையான செயற்பாடுகள் அல்லது நிகழ்வுகள் வருகின்ற போது உடனடித் தீர்மானங்களை முறையான திட்டமிடல் இல்லாமல் பழைய மாணவர் சங்கம் முன்னெடுக்கும் போது நிதிப்பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு பழைய மாணவர் சங்கம் தள்ளப்படுகிறது. இதனடிப்படையில் பழைய மாணவர் சங்க நிதிக் கணக்கின் வட்டியையும்,சங்கத்திற்கு அன்பளிப்பாக வரும் நிதியையும் கொண்டு ஓர் இயல்தகவுள்ள திட்டமென்று திட்டமிட வேண்டிய நிலைப்பாடு ஒன்று உருவாகி உள்ளது. இதனையும், எதிர்கால திட்டங்களையும் எவ்வாறு செயல் வடிவம் பெறவைப்பது என்பவைகளையும் உள்ளடக்கி திட்டங்களை வரைவதற்கு திட்டமிடல் குழு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். இது சம்மந்தமான ஆக்கபூர்வமான கருத்துக்களை பழைய மாணவர் சங்கமானது யாவரிடமிருந்தும் எழுத்து வடிவில் எதிர்பார்க்கின்றது.

" பழைய மாணவர் சங்கத்திற்கு பலமும், துணையும் பழைய மாணவர்களே"

"பழைய மாணவர் ஒருவர் தனது வாழ் நாளில் ஒரு தடவையேனும் தன்னாலான உதவியை தன்னை ஆளாக்கிய கல்லூரிக்குச் செய்ய வேண்டும்" என்று பழைய மாணவர் சங்கம் எதிர்பார்க்கிறது.

எந்திரி.தி.ஹரிதரன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வுபெற்ற அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களின் சேவை நலன் பாராட்டும் கௌரவிப்பும்

குரைகடல் ஓதும் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையில் சிறந்துவிளங்கும் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்கள் 2011-02-01ம் திகதி அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றதனையும் அவரின் ஈடுஇணையற்ற கல்விச்சேவையினையும் சிறப்பிக்கும் முகமாக பழைய மாணவர் சங்கத்தினாலும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினாலும் சேவை நலன் பாராட்டு நிகழ்வு ஒன்று நடத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் பிரதி செயலாளர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களும் எமது சங்கத்தின் முன்னால் தலைவரும் போஷகருமாகிய வைத்தியகலாநிதி கு.ஹேமச்சந்திரா அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் திருக்கோணமலை வலயகல்விப் பணிப்பாளர் திரு.கி. முருகுப்பிள்ளை அவர்களும் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதமகுருக்கள் பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திர குருக்கள் அவர்களும் கலந்துகொண்டு மேலும் நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசியினைப் பெற்று ஆலயத்தின் வீதியைச் சுற்றி கல்லூரிக்கு குடும்ப சமேதராய் அழைத்துவரப்பட்ட திரு.மா.இராசரெத்தினம் அவர்கள் பின்னர் கல்லூரியின் ஆலய வழிபாட்டுடனும் மங்கள விளக்கேற்றலுடனும் கல்லூரி திறந்தவெளி அரங்கிற்கு அழைத்துவரப்பட்டதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பித்து வைககப்பட்டிருந்தது.

நிகழ்வின் நாயகனின் நிகரற்ற சேவையினை கல்லூரியின் அதிபர் பாராட்டிப்பேசியதுடன் அவரின் கல்விச்சேவை எமது கல்லூரிக்கு தொடர்ந்தும் தேவையெனவும் குறிப்பிட்டிருந்தார். பின்னர் பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், பழைய மாணவர் சங்கமும் தனித்தனியே தமது பாராட்டுதல்களையும், கௌரவிப்பினையும் நிகழ்த்தியிருந்தன. பாடசாலை அபிவிருத்தி சங்கம், மாலைகள் அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும், வாழ்த்துப்பாக்கள் வாசித்தும் தமது கௌரவத்தினை அளித்ததுடன், பரிசுப்பொருள் ஒன்றும் வழங்கி கௌரவித்து இருந்தது. இதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் பாராட்டுதல்களும் கௌரவிப்பும் நடைபெற்றதன் பிற்பாடு பழைய மாணவர் சங்கத்தின் மணிமகுடம் சூடும் நிகழ்வும், மணிவிழா கவிதை வாசித்தளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ச்சியாக மாலைகள் அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும், வாழ்த்துப்பா கவிதை வாசித்தும் மேலும் பல பாராட்டுதல்களும், கௌரவிப்பும் நிவேற்றி வைக்கப்பட்டதுடன் பரிசுப்பொருள் ஒன்றும் பழைய மாணவர் சங்கத்தினால் முன்னாள் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வின் நாயகன் திரு.மா.இராசரெத்தினம் அவர்கள் உரையாற்றும்போது தான் கல்லூரிக்கு அளித்த சேவைக்கு ஒத்துழைப்பு நல்கிய பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திசங்கம், பெற்றோர்கள், பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்ததுடன் தன்னை இந்நிலைக்கு உயர்த்திய இறைவனுக்கும், தனது தாய்தந்தை மற்றும் குடும்பத்தினருக்கும் தனது நன்றிகளை தெரிவித்திருந்தார்.

பின்னர் பழைய மாணவர் சங்கத்தினால் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்துபசார நிகழ்வுடன் இந் நிகழ்வாகிய சேவை நலன் பாராட்டு நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

திரு.ச.சர்வேஸ்வரன்
உபபொருளாளர்
பழைய மாணவர் சங்கம்



## பழைய மாணவர் தின ஒன்றுகூடலும் அதன் நோக்கமும்

தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் "பழைய மாணவர் தினம்" யூன் மாதம் 30ம் திகதி ஆகும். 2004ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இந் நிகழ்வு தனியே ஒரு விருந்துபசாரத்துடன் கூடிய ஒன்றுகூடல் நிகழ்வாக மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் சில பயன்வாய்ந்த செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது என்று சொன்னால் அது நிதர்சனம். இந் நிகழ்வானது சம்பிரதாயபூர்வ நிகழ்வாக சில செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அதாவது பழைய மாணவர்கள், மற்றும் மாணவர்கள் யாராயினும் ஏதாவது ஒரு பொதுத்துறையிலோ அல்லது தொழில் துறையிலோ அல்லது விளையாட்டுத் துறையிலோ முன்னணி நிலையினை அடைந்திருந்தால் அவர்கள் இனம்காணப்பட்டு, நிர்வாககுழு கூட்டத்தில் அவர்களின் நிலையினை ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டு, அவர்கள் இந்நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவது ஒரு வழமையான செயல்பாடாக இருந்து வருகின்றது.

இந்நிகழ்வின் மற்றுமொரு விஷேட அம்சமாக பழைய மாணவர்களும் பாடசாலைச் சமூகமும் ஒன்று சேர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதுடன், மாணவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் சில செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வானது பழைய மாணவர்களுக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் இடையே ஒரு உறவுப்பாலமாக அமைகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. 2010ம் ஆண்டு நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திரு.சி.தண்டாயுதபாணி அவர்களும் Dr.அ.யோகானந்தமூர்த்தி அவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் விசேட விருந்தினர்களாக Eng. ந.சுதேசன் அவர்களும் மு.பத்மநாதன் அவர்களும் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வு பழைய மாணவர்களுக்கும், மாணவர்களுக்கும் கௌரவத்தினையும், ஊக்குவிப்புக்களையும் அளிப்பதுடன் சங்கத்திற்கும் இது ஒரு அங்கீகாரத்தினை பெற்றுக் கொடுக்கின்றது. இந்நிகழ்வில் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் யாவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு இந்நிகழ்வு கொண்டாடப்படுகின்றது. ஒன்று கூடும் அனைத்து பழைய மாணவர்களுக்கும் சங்கத்தின் நிதிநிலமை, சங்கத்தின் எதிர்காலத்திட்டம் என்பன விளக்கப்படுவதுடன் கல்லூரியின் தேவைப்பாடுகள் பற்றியும் எடுத்து இயம்பப்படுகின்றது. இதன் வாயிலாக கல்லூரியினதும் சங்கத்தினதும் நிலைமைகள் தெளிவாக்கப்படுவதுடன் பழைய மாணவர்கள் தங்களது கல்லூரியின்பால் அக்கறை கொண்டு செயல்படவும் இந்நிகழ்வு வழி சமைத்துக் கொடுக்கின்றது.

எனவே இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெறும்போது எதிர்காலத்தில் சங்கம் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் தன்னைப்பலப்படுத்திக் கொண்டு முன்னேறிச்செல்ல வாய்ப்பளிக்கும் என்று கூறிக்கொள்வதோடு மேலும் இன்நிகழ்வு விரிவாக்கம் பெறவேண்டும் எனவும் வினயமாக வேண்டிக்கொள்கின்றோம்

நன்றி
திரு.நா நித்தியகுமார்
நிர்வாக சபை உறுப்பினர், (பழைய மாணவர் சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Urging the students towards the national level achievements through proper motivation scheme.

As a morning star of Trincomalee, the RKM Sri Koneswara Hindu College has been disseminating its wisdom from the heart of Trincomalee for more than a centenary. The Old Boys Association of the R.K.M.Sri Koneswara Hindu College has been undertaking the valuable vital projects for uplifting the performance of the students and the physical developments of the college for a couple of decades. Further, our old boys association recently introduced the motivation scheme for boosting the phenomenal performance of the students of this college. Motivation is one of the influencing factors in urging of students for obtaining the national level achievements, in three general examinations.

In our College Prize Giving Day Function held on 10th of November 2010, eleven advance level students were awarded and honored by our old boys association for obtaining the merit passes in year 2008 and 2009 advance




level examinations. For honoring these students, eleven half sovereign gold coins were awarded by our old student Mr. P.Manoharan who dedicated this sacred duty in memory of Miss G.Sathasivam teacher who brought him upon behalf of the old boys association of R.K.M.Sri Koneswara Hindu College. This is pertinent to note here that late Miss Sathasivam was a veteran teacher in our college for a long period.

At this Prize Giving Day Function, another student .R.Neethan added a credit to our college by obtaining the sixth rank at Island Level in the G.C.E.O/L 2009.In order to honor him,a lap top was awarded by our old student Mr. T.Mugunthan on behalf of the old boys association of the Hindu college.

The Old Boys Association of this college strains every nerve for inducing the students for obtaining the national level achievements in three general examinations of fifth grade scholarship, G.C.E.ordinery level and G.C.E advance level. The Old Boys Association of this college is always prepared to provide the constructive contribution to the students and teachers who guide the students for the admirable performance.


Our respectable Old Students living in inland and abroad are very earnest to contribute to the ALMA MATER, for successfully carrying out the task of the Old Boys Association of the R.K.M. Hindu College.

In this juncture, I prefer to convey the message via this news bulletin to our old students living in abroad and inland that the motivation scheme conducted by the Old Boys Association of Trinco Hindu College will have to be consecutively undertaken with the contributions of the old students in order to uplift the national level achievements of the students of this college.




This motivation scheme is not only giving room to the students of this college for obtaining the merit passes, but it gives opportunity to increase the number of university admission from Trincomalee district also.

As a former secretary and the present committee member of this association, I have obligation to express my gratitude, on behalf of the old boys association of the R K.M.Sri Koneswara Hindu College, to our respectable old students residing abroad and inland for providing their commitments, perfect performance and the valuable contributions.




## TARGET TRIANGLE OF THE OBA

With pleasure.
S.Barathinathan.
Executive committee member O.B.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளும் அதன் பங்களிப்புகளும்

புலம் பெயர் வாழ் எமது பழைய மாணவர்களின் முயற்சியின் மூலம் திரு.குஞ்சிபாதம் தயாநிதியின் தலைமைத்துவத்தின் கீழ் கனடா பழைய மாணவர் சங்கமானது 2002ம் ஆண்டு ஆவணித்திங்கள் 24ம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக செயல்பட்டுவரும் திரு.குஞ்சிபாதம் தயாநிதி அவர்கள் எமது தாய்ச்சங்கமாகிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலங்களுக்கு மேலாக தனது சேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றியிருந்தார் என்பதனை நாம் இத்தருணத்தில் கூறிக்கொள்வது சாலப்பொருந்ததாகும்.

2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கமானது அதன் ஒரு முன்னோடி நடவடிக்கையாக எமது கல்லூரியில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவியளிக்கும் நோக்குடன் "டாக்டர் ஞானி கல்வி நிதியம்" எனும் ஒரு திட்டத்தினை ஆரம்பித்து அதனை 2003ம் ஆண்டு மாசித்திங்கள் தொடக்கம் அமுல்படுத்தியிருந்தது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் பயன்பெற்று கற்று வந்தார்கள். எனினும் சில காலத்தின் பின்னர் இத்திட்டமானது செயல் இழந்து போனது என்பது ஒரு கசப்பான உண்மையாகும். தொடர்ச்சியான செயல்பாடுகளுடன் இயங்கிவந்த கனடா பழைய மாணவர் சங்கமும் சில கால ஓட்டத்தின் பின்னர் ஒரு தேக்க நிலையினை எய்தி செயல் இழந்து போயிருந்தது. உபசங்கங்கள் உறங்கும் நிலையினை எய்தினால் தாய்சங்கத்திற்கு அது ஒரு தடங்கலாக அமையும் என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும்.

கனடா பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி.இ. புலேந்திரராஜா அவர்களை எமது சங்கம் ஓர் அலுவல் சார்ந்த அழைப்பொன்றின் மூலம் சந்தித்து இரண்டு சங்கங்களின் தற்போதைய நிலைப்பாடுகள் பற்றியும் கலந்தாலோசித்திருந்தது. இதன் மூலம் மீண்டும் இரண்டு சங்கங்களுக்குமிடையிலான உறவுகள் புதுப்பிக்கப்பட்டிருந்தது. உப சங்கங்களுக்கு இடையே உறவுகளை வளர்த்து தொடர்ந்தும் உயிரோட்டத்துடன் செயல்படுத்தவேண்டும் என்ற விடயத்தில் தாய்ச்சங்கமாகிய இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் உறுதியுடன் இருக்கின்றது என்பதனை இங்கு தெரிவித்துக்கொள்வதற்கு சங்கம் கடமைப்பட்டுள்ளது. இலண்டன் பழைய மாணவர் சங்கம் கூட ஓர் அமைப்பு வடிவில் 2003ம் ஆண்டு எமது முன்னால் அதிபரும் சங்கத்தின் தலைவருமாகிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் கூட அதன் அமைப்பு ரீதியான செயல்பாடுகள் ஏன் ஸ்தம்பிதம் அடைந்து போனது என்பது இன்னமும் ஓர் புரியாத புதிராகத்தான் உள்ளது. எனவே உறங்கு நிலையில் இருக்கும் உபசங்கங்கள் விழித்தெழவேண்டும் என வினயமாக வேண்டிக் கொள்கின்றோம்.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் 1.8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு அழகுடன் காட்சியளிக்கும் எமது கல்லூரியின் பார்வையாளர் அரங்கு முடியும் தறுவாயில் இருந்துபோது ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறையினை நிவர்த்திசெய்யும் முகமாக எமது நிர்வாகக்குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கமைய 200000 ரூபா தொகையினை உதவியாகக் கேட்டபோது கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.கு.தயாநிதி அவர்களின் முயற்சியின் மூலம் 100000 ரூபா தொகை எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது இவ்வுதவியினை அளித்தமைக்காக சங்கம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றது.

திருக்கோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளை தொடர்ந்தும் வினைத்திறனோடு செயல்பட வேண்டும் என வேண்டிக் கொள்வதோடு எமது கல்லூரியின் பால் கனடாக்கிளையின் செயல்பாடுகள் மேலும் விரிவாக்கம் பெறவேண்டும் எனவும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

திரு. ந.குமணன்
உபதலைவர்
பழைய மாணவர் சங்கம்

தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பழைய மாணவர்கள் சாதனை படைத்திருப்பின்
பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக ஆசிரியர் தினம்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சென்ற ஆண்டும் எமது தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் ஆசிரியர்களை கௌரவிக்கின்ற நிகழ்வுகள் வெகுவிமர்சையாக நடைபெற்றன. அகில இலங்கையிலும் தன் பெயரினை பொன் எழுத்துக்களால் பொறித்துக்கொண்ட எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு இப்பாடசாலை அதிபரினதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்புடனான சேவையே இதற்கடிப்படைக் காரணம் என்பதில் மறுவார்த்தைக்கு இடமில்லை. நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தினை உடையதான எமது பாடசாலை கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுத்துறை, கலைத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, இணைப்பாடவிதான செயற்பாட்டுத்துறை போன்ற பல இன்னோரன்ன துறைகளிலும் எமது மாணவர்களை முன் எடுத்துச் செல்கின்ற பெரும்பணி ஆசிரியப் பெருந்தகையினருக்கே உரியது. “நீ எங்கே நடப்படுகின்றாயோ அங்கே மலராகு” என்ற ஆசிரியர் சேவைக்கு பொருத்தமான பொன்மொழிக்கு எமது பாடசாலை ஆசிரியர்களும் இலக்கணமானவர்கள். தன்னலம் கருதாது மாணவர் நலத்தினையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படுகின்ற ஆசிரியப் பெருந்தகைகள் போற்றப்பட வேண்டியவர்கள். இத்தகைய சிறப்பிற்கும் மதிப்பிற்கும் போற்றுதலுக்குமுரிய ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக ஐப்பசி மாதம் 5ம் திகதி உலக ஆசிரியர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதை நாம் யாவரும் அறிவோம்.

ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தின நிகழ்வில் ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையினைப் பாராட்டியும், அவர்களை ஊக்குவித்தும் பல செயற்பாடுகளை பழைய மாணவர் சங்கம் முன்னெடுத்து வருகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையே இம்முறை கூட, ஐப்பசித்திங்கள் 5ம் திகதி இக்கல்லூரியின் ஆசிரியர்கள் பழையமாணவர். சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டிருந்தார்கள். தொடர்ச்சியாக 2002ம் ஆண்டில் இருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து பழைய மாணவர் சங்கமும் இந் நிகழ்ச்சியினை முன்னெடுத்து வருகின்றது. ஆசிரியர் தினம் அன்று எல்லாவிதமான அழுத்தங் களிலும் இருந்தும் ஆசிரியர்கள் விடுதலைபெற்று மகிழ்வோடு இருக்க வேண்டும். என்பதனையும் அவர்களைப் பாராட்டி ஊக்கு விற்பதையும் நோக்காகக் கொண்டு இத்திட்டம் பழைய மாணவர் சங்கம் என எனவும் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 2010 ஆண்டு ஐப்பசி 5ம் நாள் நடைபெற்றிருந்த நிகழ்விலும் பழைய மாணவர் சங்கம் தன்னாலியன்ற சிறு பிரிசில்களை வழங்கி ஆசிரியர்களை கௌரவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு தாயும் தந்தையும் ஒருகுழந்தையை உலகிற்கு ஈன்றளித்தபோதும் அந்தக் குழந்தைக்கு உலகத்தையே அறியச்செய்பவன் ஆசிரியனே. இதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்றார்கள் சான்றோர்கள். இப்பாடசாலையின் கண்போன்ற எமது ஆசிரியப் பெருந்தகையினரை மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர்சங்கம், வருடந்தோறும் கௌரவித்து பாராட்டி வருகின்றனர்.

கடந்த ஆண்டும் எமது கல்லூரி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர் கௌரவிப்பு விழாவை வெகுவிமர்சையாக நடத்தியிருந்தது. அன்றைய தினம் சகல ஆசிரியர்களும் மாணவர்களால் மாலை அணிவித்து போற்றித் துதிக்கப்பட்டனர். பரிசுப்பொருட்கள் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். பாராட்டுரைகள் பலரால் சொரியப்பட்டன. இம்முறைமட்டுமல்ல எம்முறையும் எமது பாடசாலையில் ஆசிரியர் பெருந்தகையினருக்கான இவ்வாறான கௌரவிப்பு நிகழ்வுகள் என்றென்றும் தொடர்ந்து நிலைத்திருக்கும்.

ஆசிரியர்களை என்றென்றும் போற்றுவோம்
அவர்களின் அடிதொழுது ஏற்றுவோம்

திரு.ச.சிறிதரகுமார்
(நிர்வாக சபை உறுப்பினர்)
பழைய மாணவர் சங்கம்



**பிரதம விருந்தினர் அதிபர் ஆசிரியர்களால் வரவேற்று வருவதை படத்தில் காணலாம்.**




**பிரதம விருந்தினர் கலாநிதி சி. சிவநர்த்தாநந்தா அவர்கள் உரையாற்றுவதை படத்தில் காணலாம்**



**பிரதம விருந்தினர் அதிபருக்கு அன்பளிப்பு பொருளை வழங்குவதை படத்தில் காணலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டின் இன்றைய நிலைப்பாடும் அபிவிருத்தித் திட்டமும்

திருகோணமலையில் முன்னணிப்பாடசாலைகளில் முதலிடத்தில் இருக்கும் எமது பாடசாலை ஒரு முன்னணிப் பாடசாலைக்குத் தேவையான அனைத்து வளங்களையும் கணிசமான அளவு கொண்டுள்ளது. அதுவே எமது பாடசாலை அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைவதற்கு காரணமாகவும் அமைகிறது. அதற்கு உதாரணமாக விளையாட்டுத் துறையை எடுத்துக்கொள்ளலாம்.

வருடாவருடம் இல்ல விளையாட்டுப் போட்டி தொடங்கி மாகாண மட்டப்போட்டிவரை எமது மாணவர்கள் மிகச்சிறப்பான திறமைகளை காட்டி வருவதாக தரவுகள் கூறுகின்றன. அது மகிழ்ச்சியே எனினும் எமது எல்லை அதுவல்ல. தேசிய மட்டத்திலும் எமது மாணவர்கள் சாதிக்கவேண்டும். அதற்கு பழைய மாணவர்களாகிய நாம் பெருமளவான பங்களிப்பைச் செய்யவேண்டும். அதற்கான விரிவான நீண்டகாலத் திட்டமொன்று பழைய மாணவர்சங்க நிர்வாகக் குழுவின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்திட்டமானது பாடசாலை அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர்களோடு கலந்தாலோசித்து அவர்களின் ஆலோசனைக்கு அமைய முதற்கட்ட நடவடிக்கையாக மெய்வல்லுனர் விளையாட்டுகளிற்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக தொழில்சார் விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு வல்லுனர்கள் ஆகியோர் பழைய மாணவர்களிடையே தெரிவுசெய்யப்பட்டு சேவை அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்களாக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோல் ஏனைய விளையாட்டுகளிற்கும் வல்லுனர்களை எதிர்பார்த்து நிற்கிறோம். விருப்பமுடைய பழைய மாணவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

வெறுமனே புத்தகப்படிப்பு மட்டுமே எமது வாழ்க்கைக்குப் போதுமானதல்ல. அத்தோடு கலை, இலக்கியம், விளையாட்டு என்பனவும் எமது வாழ்விற்கான பல படிப்பினைகளை எமக்குக் கற்றுத்தருகிறது. அதிலும் விளையாட்டு என்பது மனதிற்கு மட்டுமல்ல உடலிற்கும் ஆரோக்கியமான ஒன்றாகும். அதனால்தான் பாடசாலைகளில் விளையாடுவதற்கென்று பாடவேளைகள் ஒதுக்கப்பட்டு அதற்கென ஆசிரியர்களும் நியமிக்கப்படுகிறார்கள். அதை மாணர்வகளும், ஆசிரியர்களும் நன்குணர்ந்து செயற்படவேண்டியது அவர்களது கடமையாகும். பழைய மாணவர் தினத்தை ஒட்டி விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதன் நோக்கமும் அதுவேயாகும்.

வெற்றிகளைக்கண்டு அளவுக்கதிகமாய் ஆரவாரிப்பதும், தோல்வியின்போது துவண்டு போவதும் ஒரு வீரனுக்கு அழகல்ல. ஒரு உண்மையான சிறந்த விளையாட்டு வீரனுக்கு அவை இரண்டும் ஒன்றுதான். அவன் அவற்றிலிருந்து ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அனுபவத்தினைக் கற்றுக்கொள்கிறான்.

2010ம் ஆண்டு பழைய மாணவர்தினத்தை ஒட்டி நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின்போது இவற்றை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது. வெற்றி தோல்விக்கு அப்பால் எமது பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு பல அனுபவங்களைப் பெற்றதோடு பெருமகிழ்ச்சியும் அடைந்தனர். அதிலே ஒருசில தவிர்க்கமுடியாத சம்பவங்கள் ஏற்பட்டது நாம் மறக்கமுடியாத ஒன்றுதான். அவையும் நாம் பெற்ற அனுபவங்கள்தான்.

விளையாட்டுத் துறையிலே குறிப்பாக கிரிக்கற் போட்டியிலே திருகோணமலை மாவட்டத்திற்கு இரண்டாவது தடவையாக பெருமை சேர்க்கும் விடயமாக எமது மாவட்ட மென்பந்து கிரிக்கற் அணி அகில இலங்கையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டது. அதில் எமக்கு மேலும் சிறப்பான ஒரு விடயம் அவ்வணியில் இடம்பெற்றவர்களில் அணித்தலைவர் உட்பட எழுவர் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள். அதில் கூடுதல் சிறப்பு அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் திரு.உமாசுதன் அவர்களும் எமது பழைய மாணவர் என்பதேயாகும். அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறோம்.

1996ம் ஆண்டும் எமது மாவட்ட அணி தங்கப்பதக்கம் வென்றது. அதிலும் அணித்தலைவர் உட்பட ஐவர் எமது பாடசாலை பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது மாணவர்கள், பழைய மாணவர்கள் எமது பாடசாலைக்கு மட்டுமல்ல எமது மாவட்டத்திற்கும் பெருமைசேர்க்கும் விதமாக தமது விளையாட்டுத்துறைகளில் வல்லுனர்களாகத் திகழவேண்டும் என்பதே எமது விருப்பம். அதற்காக அவர்களிற்கு எமது சங்கம் தம்மாலான உதவிகளை செய்துதரும் என்பதை நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாம் கற்றதை மற்றவர்களுக்கு கற்பிப்பதே ஒரு உயாந்த மனிதனின் சிறந்த பண்பாகும். இதை எமது பழைய மாணவர்கள் நன்கு அறிவார்கள். எமது அறைகூவலை ஏற்றுக்கொண்டு பலர் முன்வருவார்கள் என்று நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். "தடைகள் எத்தனை வந்தாலும், எப்போது வந்தாலும் எமது பழைய மாணவர்களுக்கு அவர்களது இலட்சியம் ஒன்றே அவர்களது நோக்கமாக இருக்கும். அது, எமது பாடசாலை மாணவர்களை விளையாட்டில் தேசியமட்டம்வரை கொண்டுசெல்வதாகவே இருக்கும் என்பது திண்ணம்.

திரு.இ.அசோக்
நிர்வாகசபை உறுப்பினர்
பழைய மாணவர்சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பார்வையாளர் அரங்கு நிர்மாணப் பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சகலவழிகளிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எமது நன்றிகள்.

*With best compliments from:*

**EAST LINK COMMUNICATION**

Internet, Email, IDD Local Calls,
Photocopy, Fax,
Laminating, Books,
Computer type Setting, Stationary,
Binding, Fancy Goods.

189A, Thirugnanasampanther Street,
Trincomalee. 31000

E-mail : eastlink@sltnet.lk
Call : 026 2221417, 2223711
Fax : 026 2222704

Branch

**Vishnu Book Shop**
64, Vidyalayam Road, Trincomalee. 31000
026 2222851, 2223714

*With best compliments from:*

Visiting Cards
Wedding Cards
Invitations
Greeting Cards
Any Type of Card Printings

Banner Printing
Large Format Printings

Bill Books
Receipt books
Vouchers

Letter Heads
Tuites
Exam Papers
Notice
Certificate
Posters

Diary
Calender
Planner
Book Covers
All type of Bindings

News Letters
Brochures
Leaflets

Offset Printing
Digital Offset Printing
Screen Printing
Foiling

Low Cost
High Speed
High Quality

**SHAN PRINTERS**
244, Central Road, Trincomalee.
T.P : 026 2221547 Mobile : 077 7296061
E-mail : shanprinters@rocketmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org